ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1929/8 - 2015 අගෝස්තු මස 24 වැනි සඳුදා - 2015.08.24

*1929/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ. பீ. 94/47 (V)*

**(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும், 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான் இக்கட்டளையின் மூலம் -

(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் “கட்டுகஹகல்கே ரஜமஹ விஹாரை புனித பூமி ” என அழைக்கப்படுதலும் வேண்டும் என வெளிப்படுத்துகின்றேன் ;

(ஆ) “கட்டுகஹகல்கே ரஜமஹ விஹாரை பூனித பூமி” ஆக வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்பு தொடர்பிலும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென பணிக்கின்றேன்.

ரணில் விக்ரமசிங்க,<br>
கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,<br>
இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,<br>
இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.<br>
கொழும்பு 01,<br>
2015, யூலை 17.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

"கட்டுகஹகல்கே ரஜமஹா விஹாரை புனித பூமி" உள்ளடக்கும் காணி இடப்பரப்பு

*நில அளவையாளர் நாயகத்தின் 1990, ஓகத்து மாதம் 31 ஆந் திகதிய 257 ஆம் இலக்க எவ். வி. பீ. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் ஊவா மாகாணத்தின், மொனராகலை நிர்வாக மாவட்டத்தின், மொனராகலை பிரதேச செயலாளர் சிறு பிரிவின், முத்துகெலியாவ மற்றும் கட்டுகஹகல்கே கிராம அலுவலர் பிரிவிற்குள் அமைந்துள்ளதும் விஸ்தீரணத்தில் 187 ஏக்கர்களைக் கொண்டதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லைகளைக் கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு :-*

வடக்கு : *காணித்துண்டு இலக்கம் 380 மற்றும் புஸ்ஆர ;*

கிழக்கு : *காணித்துண்டு இலக்கம் 419 மற்றும் 387 ;*

தெற்கு : *காணித்துண்டு இலக்கம் 419 ;*

மேற்கு : *காணித்துண்டு இலக்கம் 405.*

*9- 146*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*